9.11.2020
அசல் வழக்கு எண்:281-2014

வா.சா.1 ராமசாமி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

எனது பாட்டனார் பெயர் அழகர்சாமி. எனது பாட்டனார் அழகர்சாமியின் அப்பா பெயர் எனக்கு தெரியாது. அழகர்சாமிக்கு 2 மகன்கள் ராமசாமி, பெருமாள்சாமி. ராமசாமியின் மகன் எனது தகப்பனார் என்றால் சரிதான். பால்சாமியின் மக்கள் தான் வாதிகள். பெருமாள்சாமிக்கு இரண்டு மனைவிகள் லெட்சுமியம்மாள், சங்கம்மாள். லெட்சுமியம்மாளுக்கு அழகர்சாமி என்ற மகன் பிறந்து 27 வயதில் காலமானார். சங்கம்மாளின் வாரிசுகள் விஜயன், கண்ணையா, ரத்தினசாமி. கண்ணையாவின் மனைவி 5ம் பிரதிவாதி ராஜம்மாள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.164/8ஏ, 8பி. சர்வே எண்.164/8ஏ, 8பின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 80 செண்டு. சர்வே எண்.164/8ஏ, 8பில் கட்டுப்பட்ட 1 ஏக்கர் 80 செண்டு எங்களுக்கு பூர்வீக பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருகிறோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் ஆதியில் தாவா சொத்தின் செட்டில்மெண்ட் சர்வே எண்.310 என்றும் அழகர்சாமி கவுண்டர் பெயரில் பட்டா எண்.149 என்று இருந்தது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் முந்தைய சர்வே எண்.310 என்றும், பட்டா எண்.149 என்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 1,2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். தாவா சொத்தின் செட்டில்மெண்ட் சர்வே எண்.310, பட்டா எண்.149 என்பதில் கட்டுப்படவில்லை என்றும், தாவா சொத்தின் பைமாஸ் எண்.562/92, 93, 94, 95, 96ல் கட்டுப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் சர்வே எண்.310ன் விஸ்தீரணம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். அதில் 149 அழகர்சாமி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரீ செட்டில்மெண்ட் சர்வே எண்.135 பெருமாள் கவுண்டா மகன்

காயம்பு கவுண்டர் பெயரில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எனது பாட்டனாருக்கு பாத்தியம் இருப்பின் சர்வே எண்ணில் விஸ்தீரணம் குறிப்பிட்டு பாட்டனார் பெயரில் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரில் பதிவாகி இருக்கும் என்றும் பாத்தியம் இல்லாததால்தான் அவ்வாறு பதிவு ஏற்படவில்லை என்றும் வழக்கிற்காக பாட்டனார் பெயரில் தாவா சொத்து பதிவாகி வந்தது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. காயம்பு கவுண்டருக்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். முதல் தாரம் பற்றி எனக்கு தெரியாது. இளைய தாரம் பற்றி எனக்கு தெரியும். தாவா சொத்திற்கு எனது பாட்டனார் பெயரில் பட்டா தாக்கல் ஆகி அதன் பிறகு எனது தாத்தா மற்றும் தகப்பனார் பெயரில் பட்டா பதிவாகியுள்ளது என்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து சம்மந்தமாக எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டு அதன் பிறகு எங்களது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது. தாவா சொத்து காயம்பு கவுண்டருக்கு பாத்தியப்பட்டு அவருக்கு பின்பு 1,2 பிரதிவாதிகளும் அவரது சகோதரர்களும் அனுபவம் செய்து வந்தனர் என்றால் சரியல்ல. காயம்பு கவுண்டருக்கு பிறகு அவரது வாரிசுகள் 135ம் நம்பர் பட்டா ஏற்பட்டு வருவாய் ஆவணங்களிலும் பதிவு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து நில உடமை பதிவு மேம்பாட்டு திட்ட காலத்தில் தவறுதலாக எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்பட்டதாகவும் அதனை ரத்து செய்ய 1,2 பிரதிவாதிகள் உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்தனர் என்றால் சரிதான். உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரிம் விசாரணை நடைபெற்று உத்தரவு ஏற்பட்டது என்றால் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. தெரிந்த ஆவணஙகளை தாக்கல் செய்துள்ளேன். உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் விசாரணையில் 3,4,5 பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகளின் முன்னோருக்கு பாத்தியப்பட்டது என வாக்குமூலம் அளித்தார்கள் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் தாவா சொத்து சம்மந்தமான மூல ஆவணங்களை பரிசீலனை செய்து உத்தரவு பிறப்பித்தார் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியரின் உத்தரவை ஆட்சேபித்து மாவட்ட வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு

தாக்கல் செய்துள்ளேன். மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணையில் யூ.டி.ஆர் காலத்தில் ஏற்பட்ட ஆவணங்கள் மட்டுமே தாக்கல் செய்துள்ளதாகவும் அதற்கு முந்தைய பூர்வீக பாத்தியப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என கூறி சீராய்வு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரின் உத்தரவை ஆட்சேபித்து எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனது தகப்பனார் எங்களுக்கு பதிவு செய்யப்படாத உயில் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார். உயில் ஆவணம் எழுதி கொடுத்த காலத்தில் எனது தகப்பனார் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்ததால் பதிவு செய்யப்படவில்லை. வா.சா.ஆ,9 ஆவணத்தில், தனிக்கொடி, ராமசாமி, பெருமாள்சாமி ஆகியோர்கள் எழுதி கொண்ட உடன் படிக்கை சாசனம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணத்தில் சர்வே எண்.164/8ஏ மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 164/8ஏ என்பது திருத்தி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது எனது தகப்பனரால் எழுதப்பட்டது. தாவா சொத்து எனது பாட்டனார் அழகர்சாமிக்கு பாத்தியம் இல்லாததால் அவரது வழிமுறை வாரிசுகளான எங்களுக்கு எவ்வித பாத்தியமும் இல்லை எனறால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆவணத்தின் அடிப்படையில் தாவா சொத்தை பொறுத்து எவ்வித உரிமையும் எங்களுக்கு ஏற்படாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணம் யூ.டி.ஆர் காலத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 மாவட்ட வருவாய் அதிகாரியின் உத்தரவில் தாவா சொத்திற்கான பட்டா தவறுதலாக பால்சாமி பெயரில் ஏற்பட்டுள்ளதாகவும், அதனை ரத்து செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதால் வா.சா.ஆ.10 ஆவணத்தின் அடிப்படையில்தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 முதல் 7 வரையிலான கிஸ்தி ரசீதுகளின் அடிப்படையில் தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும், அனுபவமும் ஏற்படாது என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் நில உடமை பதிவு மேம்பாட்டு திட்ட கால்த்திற்கு முந்தைய பட்டா

எண்.27ல் கட்டுப்பட்டது என்றால் சரியல்ல. பட்டா எண்.27 தாவா சொத்து கட்டுப்படவில்லை என்றால் சரியல்ல. எனது வீடு அமைந்துள்ள இடத்திற்கு மேற்கு பக்கம் 1,2 பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீடு மற்றும் 1,2 பிரதிவாதிகளின் வீட்டின் தெற்கே கொல்லை உள்ளது என்றால் சரியல்ல சந்து அமைந்துள்ளது. 6 அடி சந்து தென்வடலாக அமைந்துள்ளது. 6 அடி சந்தின் கிழ மேல் அளவு 39 அடி இருக்குமா என்றால் அளவு எனக்கு சரியாக தெரியாது. எனது வீட்டிற்கு அருகில் உள்ள கொல்லைக்கு பக்கத்தில் இருபுறமும் முத்துசாமிபிள்ளை, முருகப்பிள்ளை வீடுகள் உள்ளது என்றால் சரியல்ல எனது வீட்டிற்கு தெற்கே மார்க்கண்டன் செட்டியார் வீடு உள்ளது. எனது பாட்டனார் அழகர்சாமி கவுண்டரும், 1,2 பிரதிவாதிகளின் முன்பாத்தியஸ்தர் காயம்பு கவுண்டரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேலக்கோட்டை மற்றும் நடுக்கோட்டை வருவாய் கிராமத்தில் அழகர்சாமி கவுண்டருக்கு எங்கு இடம் உள்ளதோ அதன் அருகில் காயம்பு கவுண்டருக்கும், காயம்பு கவுண்டருக்கு பாத்தியப்பட்ட இடத்தின் அருகில் அழகர்சாமி கவுண்டருக்கும் இடம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நடுக்கோட்டை கிராமத்தில் சர்வே எண்.41ல் எனக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். நடுக்கோடடை கிராம சர்வே எண்.41/5ல் அழகர்சாமி கவுண்டருக்கும், காயம்பு கவுண்டரின் வாரிசுகளுக்கு பாத்தியமான கமலை கிணறு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து மற்றும் இதர சொத்துக்களை பொறுத்து 1930ம் வருடம் 1,2 பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர் காயம்பு கவுண்டா ஆவண எண். 820/1930ன் படி ரெங்கசாமி மனைவி சுப்பம்மாள் என்பவருக்கு ஈடு அடமானம் வைத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆவண எண்.820/1930ல் தாவா சொத்து 10வது இலக்கமாகவும், அதன் பைமாஸ் எண்.562 என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது பாட்டனார் அழகர்சாமி கவுண்டர் மற்றும் அவரது சகோதரர் காயம்பு கவுண்டரின் தகப்பனாரை கெப்பனகவுண்டா என அழைப்பது உண்டு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

20.09.2014ம் தேதி பிரதிவாதிகள் தாவா சொத்திற்குள் அத்து மீறி நுழைந்து எங்களது அனுபவத்தை தடை இடைஞ்சல் செய்யவில்லை என்றும் அவ்வாறான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. 20.09.2014ம் தேதியிட்ட சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. தாவா சொத்து காயம்பு கவுண்டருக்கு பாத்தியப்பட்டடு அவருக்கு பிறகு 1,2 பிரதிவாதிகள் பாத்தியம் அடைந்து தனித்த சுவாதீனத்தில் வைத்து அனுபவம் செய்து வருகின்றனர் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் காயம்பு கவுண்டரின் லெட்சுமியம்மாள், ராமசாமி, குருசாமி ஆகியோர்களுக்கும் பாத்தியம் உள்ளதால் அவர்களையும் கட்டுப்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் லெட்சுமியம்மாள், ராமசாமி, குருசாமி ஆகியோர்களை சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள வழக்கு அவசியமான தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது வழக்கு மூலம் தவறானது என்றும் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.